**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 12.08.2026**
**OS. No. 88/2020**
**வழக்கு சாட்சி PW.1– கண்ணகி, க/பெ.அர்ஜீணன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>1, 2 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1) இந்த வழக்கை நானும், என் கணவர் மற்றும் என் கொழுந்தன் ஆகியோர் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம். என் கொழுந்தனார் பெயர் சகாதேவன் ஆகும். அவரிடமிருந்து தான் சொத்தை கிரையம் பெற்றோம். சித்தையன், மாணிக்கம், மாதேஷ் ஆகியோார்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மாணிக்கம் வழக்கு நிலுவையிலிந்தபோது இறந்துவிட்டார். மாணிக்கத்திற்கு வாரிசுகள் உள்ளனரா என்றால் உள்ளனர். அவர்களது வாரிசுகளை மாணிக்கம் இறந்த பிறகு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் பட்டா எண் என்னவென்றால் எனக்கு தெரியவில்லை. சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், ச.எண்.291/2 ஆகும்.

2) பிரதிவாதிகள் என் சின்ன மாமனார் பழனியப்ப கவுண்டரின் மகன்கள் ஆவார்கள். என் மாமனார் பெயர் கந்தப்ப கவுண்டர் ஆகும். தாவா சொத்து காலி நிலமா தான் உள்ளது, அதற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 வீட்டு வரி ரசீதுகள் இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தமற்றவை என்றால் சரிதான். இந்த வழக்கில் யார் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் என்ன சங்கதிகள் சொல்லியுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது.

3) வா.சா.ஆ 8 ஆவணத்தில் கண்டுள்ள வழக்கை என் கொழுந்தன் எங்கள் மீது தாக்கல் செய்திருந்தார், அதன் பிறகு சமாதானம் ஏற்பட்டு, அந்த சொத்தை நாங்களே

கிரையம் பெற்றதால் அந்த வழக்கை அவர் வாபஸ் பெற்றுவிட்டார். வா.சா.ஆ.8 தாவாவில் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாததால் தெரியாது. அதை தெரியாமல் தான் என் நிரூபண வாக்குமூலத்தில் அதை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.8 தாவாவானது சகாதேவன் மற்றும் சந்திரா ஆகியோர்கள் யார் யார் மீது, என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தனர் என்றால் எனக்கு தெரியாது.

4) மேற்படி வா.சா.ஆ 8 தாவாவானது பைசல் செய்யப்பட்டு முடிக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனோ என்றால் இல்லை. வா.சா.ஆ.8 ல் கண்ட வழக்கு முழு விசாரணைக்கு பின் முடிக்கப்பட்டது என்பதை பிரதிவாதிகள் தங்கள் பதிலுரையில் கூறியுள்ளார்கள் என்றும், அது குறித்து தெரிந்துகொண்டேன பைசல் செய்யப்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னைவிட என் கணவருக்கு இந்த வழக்கின் அனைத்து சங்கதிகளும் நன்றாக தெரியும் என்றால் எனக்கே சுமார் 40 வருடங்களாக தெரியும், அவருக்கும் படிப்பு இல்லாததால் அவருக்கு தெரியாது. படிப்பு இல்லை என்று நான் தவறாக சொல்கிறேன் என்றும், சொத்தானது என் கணவர் குடும்பத்தாரின் குடும்ப சொத்து என்று சொல்வதால் அவருக்கு தான் விவரங்கள் அதிகமாக தெரிந்திருக்க கூடும் என்றும், அவர் சாட்சியம் அளிக்க வந்தால் உண்மையை சொல்லிவிடுவார் என்றும், பிரச்சனைக்கு நான் தான் காரணம் என்பதால் அது குறித்து நானே சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 மாதிரி வரைபடத்திலுள்ள விவரங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் படிப்பறிவு இல்லாததால் எனக்கு தெரியாது. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களிலுள்ள விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஏற்கனவே இந்த வழக்கு சொத்து குறித்து இதே நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், அதே சொத்து குறித்து அதே

தரப்பினர்கள் மீண்டும் வழக்கிட முடியாது என்றும், அவ்வாறு வழக்கு தாக்கல் செய்வதற்கு சட்டப்படி தடை உள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 27.08.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.